# TAMIL NADU ELECTRICITY OMBUDSMAN

19- A, Rukmini Lakshmipathy Salai, (Marshal Road),
Egmore, Chennai – 600 008.
Phone : ++91-044-2841 1376 / 2841 1378/ 2841 1379 Fax : ++91-044-2841 1377
Email : tnerc@nic.in Website : www.tneo.gov.in

**<u>முன்னிலை: திரு.ஆ. தர்மராஜ், மின்குறை தீர்ப்பாளர்</u>**

**<u>மேல்முறையீட்டு மனு எண்.50 / 2015</u>**

திரு. R. ஜெகநாதன்,
த/பெ ராமசாமிக் கவுண்டர்,
பள்ளியபாளையம்,
பூமலூர் அஞ்சல்,
மங்கலம் வழி,
திருப்பூர் மாவட்டம் . . . மேல்முறையீட்டாளர்

எதிர்

மேற்பார்வை பொறியாளர்,
கோயம்புத்தூர் மின்பகிர்மான வட்டம்/தெற்கு,
டாடாபாத், கோயம்புத்தூர் – 641 012 . . . எதிர்மனுதாரர்

**<u>ஆணை நாள் : 27–7–2015</u>**

1. திரு. R. ஜெகநாதன், த/பெ ராமசாமிக் கவுண்டர், பள்ளியபாளையம், அவர்கள் தன்னுடைய 28.5.2015 நாளிட்ட மனுவில் கோயம்புத்தூர் மின் பகிர்மான வட்டம்/தெற்குவின் மின் நுகர்வோர் குறைதீர்க்கும் மன்றத்தின் 20.4.2015 நாளிட்ட ஆணையில் திருப்தியில்லை என்றும் மன்றத்தால் மின்னளவி பழுதடைந்த காலத்திற்கு விதிக்கப்பட்ட மின்கட்டணத் தொகையான ரூ.49,295/– ஐ ரத்து செய்ய வேண்டும் என்று கோரியுள்ளார்.

2. மன்றத்தின் ஆணையில் மேல்முறையீட்டாளர் செலுத்த வேண்டும் என்று தெரிவிக்கப்பட்ட தொகையான ரூ.27100/–ல் 25 சதவீதத் தொகையை உரிமம்தாரரிடம் செலுத்திய ரசீதை மேல்முறையீட்டாளர் மனுவுடன்இணைத்து சமர்ப்பிக்கவில்லை என்பதால்,

அவ்வாறு பணம் செலுத்திய ரசீதின் நகலை சமர்ப்பிக்கும்படி 5.6.2015 நாளிட்ட மின்குறைதீர்ப்பாளரின் கடிதத்தின் மூலம் மேல்முறையீட்டாளரிடம் கோரப்பட்டது.

3. மேல்முறையீட்டாளர், அவர் செலுத்தவேண்டிய 25 சதவீதத் தொகையான ரூ.6775/—ஐ கோயம்புத்தூர் மின் பகிர்மான வட்டம்/தெற்குவில் செலுத்தியமைக்கான ரசீது எண்.CBS284/AR2S3048 நாள் 19.6.2015 நகலை தன்னுடைய 15.6.2015 நாளிட்ட கடிதத்துடன் (அலுவலகத்தில் கிடைக்கப்பெற்ற நாள் 22.6.2015) இணைத்து அனுப்பியுள்ளார். எனவே,அவரின் மேல்முறையீட்டு மனு எண்.50/2015ஆக பதிவு செய்யப்பட்டது.

4. மேற்கண்ட மேல்முறையீட்டு மனுவின் நகல், மேற்பார்வைபொறியாளர், கோயம்புத்தூர் மின்பகிர்மான வட்டம்/தெற்கு அவர்களுக்கு அனுப்பப்பட்டு இசைவிணக்கம் எதுவும் ஏற்படவில்லை எனில் அவரின் பதிலுரையை சமர்ப்பிக்க வேண்டும் என்று 2.7.2015 நாளிட்ட மின்குறைதீர்ப்பாளரின் கடிதம் மூலம் தெரிவிக்கப்பட்டது.

5. மேற்பார்வை பொறியாளர்/கோயம்புத்தூர் மின் பகிர்மான வட்டம்/தெற்கு அவர்கள் 20.7.2015 அன்று மேல்முறையீட்டாளருக்கும் எதிர்மனுதாரருக்கும் ஒரு இசைவிணக்க கூட்டம், மேற்பார்வை பொறியாளர் கோயம்புத்தூர் மின் பகிர்மான வட்டம்/தெற்கு அவர்களின் அலுவலகத்தில் நடைபெற்றது என்றும், அந்த இசைவிணக்க கூட்டத்தில் மின்கட்டணம் சரியாகத்தான் மன்றத்தில் தீர்வு செய்யப்பட்டுள்ளது என்பது மேல்முறையீட்டாளருக்கு விளக்கப்பட்டது என்றும் அந்த விளக்கத்தை ஏற்றுக் கொண்டு அவர் மேலும், செலுத்தவேண்டிய ரூ.20,325/—ஐ செலுத்த சம்மதம் தெரிவித்துள்ளார் என்றும் அவருடைய மேல்முறையீட்டு மனுவை திரும்ப பெற்றுக் கொள்கிறேன் என்றும் தெரிவித்துள்ளார் என்றும் தன்னுடைய 22.7.2015 நாளிட்ட கடிதத்தில் தெரிவித்துள்ளார்.

6. எதிர்மனுதாரர், மேல்முறையீட்டாளர் தன்னுடைய மேல்முறையீட்டு மனுவை திரும்ப பெற்றுக் கொள்கிறேன் என்று தெரிவித்துள்ளார் என்று அவர்கள் இருவரும் செய்து கொண்ட இருதரப்பு ஒப்பந்தத்தினை சமர்ப்பித்துள்ளார். அந்த இருதரப்பு ஒப்பந்தத்தின் சம்பந்தப்பட்ட பத்திகள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன.

*“ <u>மேற்பார்வை பொறியாளர்/கோவை மின்பகிர்மான வட்டம்/தெற்கு/கோவை</u>*

*நுகர்வோர் குறைதீர்க்கும் மன்றத்தின் உத்தரவில் தங்களது தொழிற்சாலையில் உள்ள மின்னளவி பழுது அடைந்த மற்றும் புகைந்த காரணத்தினால் அந்த நாட்களுக்கு தாங்கள் செலுத்த வேண்டிய தொகையானது வாரிய விதிகளின்படியும் தாங்கள் அளித்த ஆவணங்களை பரிசீலித்தும் கணக்கீடு செய்யப்பட்டு தாங்கள் ஏற்கனவே செலுத்திய தொகையினை கழித்தும் மீதமுள்ள தொகையாக ரூ.27,100/—ஐ செலுத்துமாறு தெரிவிக்கப்பட்டது.*

*இது தொடர்பாக தாங்கள் மின் குறைதீர்ப்பாளர்/சென்னை அவர்களிடம் மேல்முறையீடு செய்ததைத் தொடர்ந்து அவரின் ஆணையின்படி தாங்கள் ரூ.27,100/—ல் 25 சதவீதத்தை அதாவது ரூ.6775/—ஐ செலுத்தியுள்ளீர்கள்.*

*மேலும், தங்களது மேல்முறையீட்டு மனுவை முறையாக பரிசீலித்து கணக்கீடு செய்யப்பட்டது தொடர்பாக விளக்கம் கொடுக்கப்பட்டது. எனவே, தாங்கள் மீதமுள்ள தொகையான ரூ.20,325/— செலுத்துமாறு தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.*

*<u>மனுதாரர்</u>*

*தாங்கள் கூறியதை ஏற்றுக்கொண்டு சமரச முடிவுக்கு உடன்பட்டு ரூ.20,325/—ஐ செலுத்த சம்மதம் தெரிவித்துக் கொண்டு மேல்முறையீட்டுமனுவை வாபஸ் பெற்றுக் கொள்கிறேன் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.*

| | |
|---|---|
| *ஒப்பம்/20.7.15*<br>*மனுதாரர்* | *ஒப்பம் /20.7.15*<br>*மேற்பார்வை பொறியாளர்*<br>*கோ.மி.ப.வ.தெற்கு/கோவை”* |

7. மேற்கண்ட மேல்முறையீட்டாளர் மற்றும் எதிர்மனுதாரர் ஆகிய இருவரும் கையொப்பமிட்டுள்ள 20.7.2015 நாளிட்ட இருசாரார் இசைவிணக்க ஒப்பந்த உடன்படிக்கையில் மேல்முறையீட்டளர் தன்னுடைய மேல்முறையீட்டு மனுவை வாபஸ் பெற்றுக் கொள்கிறேன் என்று தெரிவித்துள்ளதால், மேல்முறையீட்டு மனு எண்.50/2015 தள்ளுபடி செய்யப்படுகிறது என்று தீர்வு செய்யப்படுகிறது. செலவு தொகை இல்லை.

**(ஆ. தர்மராஜ்)**
மின்குறைதீர்ப்பாளர்

பெறுநர்
**1)** திரு. R. ஜெகநாதன்,
த/பெ ராமசாமிக் கவுண்டர்,
பள்ளியபாளையம்,
பூமலூர் அஞ்சல்,
மங்கலம் வழி, திருப்பூர் மாவட்டம்

2) மேற்பார்வை பொறியாளர்,
கோயம்புத்தூர் மின்பகிர்மான வட்டம்/தெற்கு,
டாடாபாத்,
கோயம்புத்தூர் – 641 012

3 தலைவர்,
(மேற்பார்வை பொறியாளர்),
மின் நுகர்வோர் குறைதீர்க்கும் மன்றம்,
கோயம்புத்தூர் மின்பகிர்மான வட்டம்/தெற்கு,
டாடாபாத்,
கோயம்புத்தூர் – 641 012

4) தலைவர் மற்றும் நிர்வாக இயக்குநர்,
தமிழ்நாடு மின்உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகம்,
நடிப்பிசைப் புலவர் கே.ஆர். ராமசாமி மாளிகை,
144, அண்ணாசாலை,
சென்னை – 600 002.

5) செயலாளர்
தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம்
எண். 19A, ருக்மினி லட்சுமிபதி சாலை
எழும்பூர், சென்னை – 600 008.

6) உதவி இயக்குநர் (கணினி) – <u>மின்குறைதீர்ப்பாளரின் இணையதளத்தில் வெளியிடுவதற்காக</u>
தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம்,
எண். 19A, ருக்மினி லட்சுமிபதி சாலை,
எழும்பூர், சென்னை – 600 008.